நம் பள்ளியின் சார்பாக ஆண்டுதோறும் ஜூலை 15-ஆம் நாள் காமராசர் பிறந்தநாளைக் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுவது வழக்கம். அதே போல் இந்த ஆண்டும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் நம் பள்ளியின் தொடக்கப்பள்ளி மாணவர்கள் நடனம் ஆடினர். இடைநிலைப்பள்ளி மாணவர்கள் பாடல் பாடினர். உயர்நிலைப் பள்ளி மாணவி காமராசர் பற்றிய செய்தியைப் பேச்சுத்திறன் மூலமாக வெளிப்படுத்தினார். அன்றைய தினம் சிறப்பு விருந்தினராக ஐ.ஐ.டி முத்தமிழ் மன்றத் தலைவர் திரு.அருணாச்சலம் அவர்கள் தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றினார். நம்பள்ளியின் சார்பாக சிறப்பு விருந்தினர் அவர்களுக்குப் பள்ளி முதல்வர் அவர்களால் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இவ்விழாவினை நம் பள்ளி முதல்வர், துணை முதல்வர், பிரிவுசார் தலைவிகள், மற்றைய ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் அலுவலக ஊழியர்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தினர்.